IV. GOVERNMENT MOTION

Motion under rule 21 (3) of the Council Rules.

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Deputy Chairman, Sir, I move—

" That under rule 21 (3) of the Tamil Nadu Legislative Council Rules, item (8), namely, The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 28 of 1970) under "II—Government Bills" be taken up before item (1)".

DEPUTY CHAIRMAN : The question is—

"That under rule 21 (3) of the Tamil Nadu Legislative Council Rules, item (8), namely, The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 28 of 1970) under "II—Government Bills" be taken up before item (1)."

The motion was put and carried.

V. GOVERNMENT BILLS

(1) *The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill*, 1970 (*L.A. Bill No.* 28 *of* 1970)

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மாண்புமிகு தலைவரவர்களே, சட்டப் பேரவை ஏற்றுக்கொண்டுள்ள தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) மசோதா* (சட்டப் பேரவை மசோதா எண் 28—970) பரிந்துரைகள் செய்யப்படுவதற்காக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன் மொழிகிறேன்.

ஜனநாயகம் சிறந்த முறையிலே நம்முடைய தமிழ் நாட்டில் நடைபெறுவதற்காக, சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவரவர்கள், இந்த அவையின் எதிர்க் கட்சித் தலைவரவர்கள், சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்கள், நம்முடைய அரசுக் கட்சிக் கொரடாக்கள், மேலவைத் துணைத் தலைவர் இவர்களுக்கெல்லாம் சில வசதிகள் செய்து தர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அளித்த வாக்குறுதிப் பிரகாரம், அப்படிப்பட்ட வசதிகள் செய்யப்படுவதன் காரணமாக, அந்த வசதிகளைப் பெறுகின்ற சட்ட மன்ற உறுப்பினர்களெல்லாம் சிறந்த முறையிலே நம்முடைய நாட்டிற்கும் பணியாற்றுவதற்கு வாய்ப்பு இருக்குமென்ற அடிப்படையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. சம்பளம் என்ற பெயரளவில் ரூ. 500, வீட்டு வாடகைப்படி ரூ. 100, கன்வேயன்ஸ் அலவன்ஸ் ரூ. 100, கார் வசதி செய்து கொடுத்து, அதற்கு டிரைவர், அந்தக் காரை பழுது பார்ப்பதற்குரிய பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்வது, அவர்களுக்கு உதவியாளர்கள், கடைநிலைப் பணியாட்கள், இவர்களையெல்லாம் கொடுக்க வேண்டுமென்ற விவரங்கள் இந்த மசோதாவில் உள்ளடங்கியிருக்கின்றன. அதேபோல சட்ட மன்றத்திற்குத்

---

*Printed as Appendix III.

தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கிடையே ஒரு உறுப்பினர் இறந்து விடுவாரானால், அவர்களுடைய குடும்பங்கள் அல்லல்படுகின்ற சூழ்நிலையில், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் ஒரு படி கொடுக்கின்ற ஒரு சட்டப் பிரிவும் இந்த மசோதாவில் இணைக்கப் பட்டிருக்கிறது. நம்முடைய துர்ப்பாக்கியம், இந்த 1967-க்குப் பின்னாலேதான் ஏராளமான அங்கத்தினர்கள் இறந்திருக்கிறார்கள். அவர்கள் இனிமேலும் அப்படி இறப்பார்களோ, இல்லையோ என்பது பிரச்னையல்ல. ஏழைகள், பணக்காரர்கள் என்ற வேறுபாடு இல்லாமல், யாராக இருந்தாலும், அவர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்கிய மான நிலை ஏற்படுமானால், அவர்களுடைய குடும்பத்திற்கு பாதுகாப்புத் தர வேண்டுமென்ற முறையிலே இந்தப் படி அளிக்கப்படுவதற்கு இதிலே வகை செய்யப்பட்டிருக்கிறது. ஜனநாயகத்திலே நம்பிக்கை யுள்ள நாம், ஜனநாயகம் சிறந்த முறையிலே நடப்பதற்கு ஆளும் கட்சியும், எதிர்க் கட்சிகளும் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் இந்திய ஜனநாயகத்திற்கு நம்முடைய தமிழ் நாடு வழி காட்டும் வண்ணம் இந்த மசோதாவை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். இதை எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் ஏகமனதாக நிறைவேற்றித் தருவார் கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற வேறுபாடு நம்முடைய சட்டமன்ற எல்லைக்குள் இல்லாவிட்டா லும், அவர்களுக்குச் சில வசதிகளை அதிகமாகச் செய்து கொடுக்கும் வகையில், அவர்கள் இன்னும் அதிக அளவிலே மக்களுக்குத் தொண் டாற்றுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்குமென்று அரசாங்கம் கருதுகிறது.

வெளியிலே அரசியல் கட்சி மாச்சரியங்கள் இருக்கின்ற காரணத்தால், சட்ட மன்றங்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோருக்கு ஏராளமான செலவாகிறது என்று பிரசாரம் நடத்தப் படுகிறது. (5-20 p.m.) இதை ஒவ்வொரு கட்சியும் தங்களுடைய தேவைக்கு ஏற்றவாறு அந்தப் பிரசாரத்தை நாட்டிலே நடத்தி வருகின்றது. ஆனால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்த அளவிலே, சட்ட மன்றம் நடை பெறுவதற்காக ஏற்படுகின்ற செலவுகள் ஜனநாயகத்தைப் பாதுகாப்ப தற்காக ஏற்படுகின்ற செலவுகள் என்றுதான் நாங்கள் கருது கிறோம். இதற்காக நாம் ஆடம்பரச் செலவு செய்யவேண்டிய தில்லை. தேவைப்பட்ட செலவுகளை ஏற்றுத் தீரவேண்டுமென்பதிலே ஒருமித்த கருத்து கொண்டிருக்கிறோம். அந்த எண்ணத்திலேயே அமைச்சர்கள் 500 ரூபாய் சம்பளம் வாங்குகிறோம். எதிர்க் கட்சித் தலைவரும் அதே சம்பளம் வாங்க வேண்டுமென்று நாங்கள் கருது கிறோம். அந்த அளவிற்கு அவர்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும், வசதி வாய்ப்புக்கள் தேடித் தர வேண்டும், அதன் மூலமாக அவர்கள் ஜனநாயகப் பாதுகாவலர்களாக இருக்க வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. இந்த ஆட்சியை உருவாக்கிய அறிஞர் அண்ணா அவர்கள் அத்தகைய அரசியல் நாகரீகத்தை, பண்பை, அரசியலை எங்களுக்கெல்லாம் கற்றுத் தந்தார்கள். இன்றைக்கு நாங்கள் நிறை வேற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம், இந்த மசோதாவின் மூலமாக. இந்த மசோதா நிறைவேற்றப்படுவதன் மூலமாக, உலகத்திற்கு நாம் இதைச் சொல்லலாம், நாட்டிற்கு எடுத்துச் சொல்லலாம். இங்கே எல்லாக் கட்சிகளும் அரசு இயந்திரத்தில் பொறுப்பு ஏற்கின்றன என்ற ஜனநாயக மரபை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லலாம்.

8th September 1970] [திரு. எஸ். மாதவன்]

அரசு இயந்திரத்தில் பழுது, தவறுகள் இருக்கலாம். ஆட்சி இயந்திரம் பரவலாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் அமைச்சர்கள் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பது சரியல்ல. அரசுக்குத் தெரியாது, அமைச்சர்களுக்குத் தெரியாது தவறுகள் இருக்கலாம். அரசுக் கொள்கைக்கு எதிராகக் கூட நடக்கலாம். அந்தத் தவறுகளைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தப் பார்க்கிறோம். அந்தத் தவறுகளைப் பற்றிக் கேட்கக் கூடிய நல்ல வாய்ப்புத் தான் சட்ட மன்றத்தில் இன்றைக்கு நாம் காணுகிற காட்சிகளாகும். இப்படிப்பட்ட வாய்ப்புகள் உருவாவதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் சிறந்த முறையில் பாடுபட வேண்டும் என்ற முறையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதற்கு ஏகோபித்த கருத்து இருக்கிற காரணத்ினால், யாருமே பேச மாட்டார்கள் என்று நம்புகிறேன். அமைதியாக இருந்து ஆமோதித்து விடலாம். நாட்டு மக்கள் எல்லாம் நல்ல ஜனநாயகம் இந்த மன்றத்தைப் பாதுகாக்கும் என்ற கருத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் இந்த மசோதாவை ஆதரிக்க வேண்டும், நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 28 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The Bill is before the House for discussion.

THIRU M. RAJAH IYER : Mr. Deputy Chairman, Sir, I am just provoked to say a few words lest the Hon. Minister should think that silence is an essential aspect of democracy. The Hon. Minister has made a brief speech pointing out the salient features of this Bill. It is indeed a tribute to our belief and faith in democracy which is so deep-rooted here that the Government should have thought of bringing forward this Bill. I only want to congratulate the Government on having brought this Government Bill forward. I am not sure whether any other State can be proud of such a measure and whether any other State has placed the Leader of the Opposition on the same footing as the Minister and the Speaker. I am very happy to endorse every word which the Hon. Minister has just now stated. I would like to add one more word. It is not merely a reflection of the faith that the Government have in democracy but a reflection of the faith in this system of Government, namely, the bi-cameral system of Government, where the privilege that is open to one House is open to the other House also. I take it as a symbol of the Government's faith in the existence and usefulness of this Upper Chamber. The privilege that is given to the Speaker is given to the Chairman, and the privilege given to the Deputy Speaker is extended to the Deputy Chairman. The privileges of the Members of both the Houses are all alike. I take it as a tribute to the usefulness of the functions played by the House. It is a question of making all the facilities, all the allowances and salaries available to the Speaker and the Deputy Speaker, available to the Chairman and the Deputy Chairman and to the

Leader of the Opposition. I am thrilled at the fact that we give due place to the Leader of the Opposition in our House. I would like the Government to go just one step forward and make all facilities open to the Ministers available to the Leader of the Opposition also. The salary is there, the conveyance allowance is there, and the house-rent allowance is there. All the privileges and allowances are there excepting the free medical aid to which the Ministers and their families are entitled — for which, I am afraid, the Leader of the Opposition in this House or in the other House may not be eligible unless it is explicitly laid down that the Leader of the Opposition will be entitled to the same free medical aid to which the Ministers are entitled. Not that they are suffering for lack of that aid, but, it would make the recognition complete and it would make the equality of the status full, if we say that what is open to the Minister is open to the Leader of the Opposition also.

Though not directly based upon this Bill, I would like to make just one reference to the Lounge that the Members of this House are getting. It is quite princely ; it is very luxurious ; it is going to serve a very good purpose. I would like to request the Government to take precautions to see that the Lounge is used only by the Members of this House and their *bona fide* guests and friends, and see that it does not convert itself into something like a Third Class Waiting Room in a Railway Station where not only the passengers but also the stray people and the stray cattle wander in. Because of the location of the lonuge so near the gate, some precaution must be taken to see that the Lounge is kept out of bounds for those who are not *bona fide* guests of the Members.

Finally, may I just take this opportunity to voice one plea which the hon. Lady Member Thirumathi Clubwala Jadhav has been making every time, that this House deserves a better chamber ? It is so elongated that it is difficult for me here at this end to catch the eye of the Hon. the Chairman or the Deputy Chairman and my tussle will become very, very difficult when the hon. Lady Member takes her seat by my side. (Laughter). I am unfortunately so thin and God has not been quite benevolent in that respect to me. It is difficult for a thin man like me to catch the Chairman's eye. The thinness may be exaggerated due to other environmental handicaps. To those handicaps may be added the handicap of the House. This is not the House where we should continue to have our deliberations. Thus far the Government can take credit for all the things that they have done to place this House on a par with the other House and in extending to the Leader of the Opposition of this House the privileges that are open to the Leader of the Opposition of the other House and in extending to them the privileges, allowances and all facilities open to the Ministers. I only appeal to them to make this picture complete by attending to just one or two defects which still persist. Thank you, Sir.

8th September 1970]

THIRU A. R. DAMODARAN : Mr. Deputy Chairman, Sir, I congratulate the Government on having brought forth this Bill—Payment of Salaries Bill—wherein they have provided for the payment of salary and certain other allowances to four distinguished Members of the Legislature.

Sir, reference has been made by the Hon. the Law Minister that generally some of these measures attract a great deal of criticism outside, but in this case, I think it will be generally welcomed by the public because what the people are against is hypocrisy and not a genuine Bill of this nature. In fact, the only reason why the people outside the Legislature criticise some very important persons is because their public pronouncements do not tally with their personal behaviour, and that is exactly the reason why people find fault with them, when they want certain privileges to be given or their salaries to be raised. In the case of our State, Sir, the salary that has been suggested is extremely moderate and although it is not my business to suggest to the Government about the salaries of Ministers, which they have decided as a matter of policy, I still feel that in the present state of affairs, when Ministers have to devote full-time attention to their jobs, when they cannot even call two or three hours of a day's work as their own for any leisure, I certainly believe that Ministers of State Governments should receive better emoluments than what they are receiving at present. I realise that this decision was taken soon after the 1967 Elections, when public feeling was pronounced, at the so-called fringe benefits and other emoluments enjoyed by the Ministers at that time. But considering the high cost of living and the standards which the Ministers will have to maintain in their personal homes, it is absolutely essential and — although I know it may not be possible for them to do this before 1972 — I hope that at least after 1972, when they cannot claim any personal interest in the salaries that will be drawn by Ministers from that time, the ceiling that has been placed on ministerial salaries, which is really at a ridiculously low figure of Rs. 500/-, will be increased. I think every honest man will confess that it is impossible for Ministers, especially in the discharge of their public duties to maintain themselves on this very meagre salary and I do not think the public will misunderstand if an honest attempt is made to place them on a better footing. I wholeheartedly welcome the grant not merely of the salary, but what is far more important as a Member of the Legislature, the grant of a Stenographer in the grade of an Assistant to these four gentlemen who occupy important positions in this Legislature.

One of the facilities that I have often missed is this. Of course, it has been luckily recompensed by the Lounge, which my hon. Friend, Thiru Rajah Iyer, has unfortunately characterised as ' a princely lounge.' It is an expression which we should not use hereafter because we may find that the Government by an executive fiat remove whatever princely

comforts that my hon. Friend has found in the Lounge. It is not a princely lounge, but is a very comfortable lounge. One of the facilities which we, Members of the Legislature, have often felt lacking is the absence of good stenographic assistance. Whenever we want to prepare notes for our speeches, whenever we want to collect details and data, we have to crowd in the Secretary's room and trouble him from his usual work. Although it may not be possible to implement it immediately, I hope that in course of time, it will be possible, at least during session time, for the Government to place at the disposal of Members of the Legislature three or four able stenographers, who will be able to help the Members in the preparation of their speeches. With these few words, I congratulate the Government once again on having brought forward this very honest and sincere measure and congratulate them on the straightforward method which they have adopted in this regard.

Thank you, Sir.

5-30 p.m. *THIRU S. NARAYANASWAMY: Mr. Deputy Chairman, Sir, more han the Bill itself, I wish to congratulate the Hon. the Minister for Industries on the extremely suave and fine speech that he made introducing the Bill. The spirit behind this measure is one which recognises the innate sublimity of the democratic form of Government. There is only one danger and that danger was voiced forth years ago — some 40 years ago — in the Canadian House of Parliament. Sir, there, the Leader of the Opposition was paid a salary only a few pounds less than what was paid to the Prime Minister of the Commonwealth Government of Canada and the complaint in Canada was that the Leader of the Opposition was not particularly keen on unseating the Prime Minister and his party because the slightly increased emolument is not worth the onerous responsibility and worry of the office of the Prime Minister. I feel, Sir, that the same motivation will not obtain in this country and that the Leader of the Opposition, who is going to be given certain facilities, however modest, will welcome this in the same spirit in which it has been made. I only wish to say that Thiru Damodaran made a very fine point when he spoke about the Ministers' salaries being inadequate. May I add that, in my opinion, in the present inflationary state of affairs, when the worth of a rupee is debased from week to week by the Central Government's action, the salary paid to Ministers may not be regarded as adequate ? I hope and trust that this act of self-abnegation will be revised by the Ministry before long.

I congratulate the Government on the spirit behind this Bill in offering facilities. Thiru Damodaran's impatience in getting facilities by way of a stenographer is understandable. In the American Senate and the House of Representatives practically every Member gets a Stenographer, a telephone and everything in the premises itself. I suppose it will take a long time before we get similar facilities. I fully share Thiru

Rajah Iyer's difficulty in catching the eye of the Chairman from a distance. But I do think it may be possible by a slight strategic rearrangement of seats, to enable Thiru Rajah Iyer to catch the eye of the Chair. I am sure all the Members will echo my feeling that the spirit behind this Bill is one which is to be welcomed and which believes in the abiding respect for the system of Government, because it is democracy which enables the Leader of the Opposition to keep himself above want and above discomfort. I have great pleasure in congratulating the Government and in supporting this Bill.

Thank you, Sir.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவை, நான் எதிர்பார்த்தபடி, பாராட்டி வரவேற்று வயது முதிர்ந்த அனுபவம் உள்ள அங்கத்தினர்கள் எல்லாம் பேசினார்கள். அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முன் கூட்டியே கூறிவிட்டார்கள். பேசாமலே அனுமதி தந்து விடுகிறேன் என்று என்னிடத்தில் சொல்லிவிட்டார்கள். காலம் குறைவாக இருக்கிற காரணத்தினால், நான் அடுத்த சட்டப் பேரவைக்குச் செல்ல வேண்டி இருக்கிற காரணத்தினால், சுருக்கமாகப் பேசுகிறேன். இந்த அவையினுடைய அமைப்பு மாற வேண்டுமென்று நம்முடைய உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அதற்கு தம் உருவம் காரணமாக இருக்கும் என்று சொன்னார்கள். நான் அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. அவர் தெரியாது மறைக்கப்பட்டு இருந்தார் என்பதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. காரணம், இந்த மன்றத்தினுடைய பெரும் பகுதி நேரத்தை அவர்தான் எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். அவர் எங்கே இருந்தாலும், அவருடைய ஆற்றலும், அறிவும் இந்த மன்றத்திற்குப் பயன்படும் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதிக வசதிகள் வேண்டுமென்ற கருத்தை நாங்கள் ஒருக்காலும் மறுக்கவில்லை.

நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்களும் மாண்புமிகு அங்கத்தினர் திரு. நாராயணசாமி அவர்களும் இங்கே பேசும்போது, அதையேதான் வலியுறுத்திப் பேசினார்கள். மற்ற நாடுகளுடைய பாராளுமன்ற முறைகளை எடுத்துச் சொன்னார்கள். அங்கத்தினர்கள் ஆற்றுகிற பணிகளுக்குத் துணையாக வசதிகள் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் எல்லாம் அமைகின்றன. அமைச்சர்களுக்கெல்லாம் சம்பளத்தைக் கூட்ட வேண்டுமென்று அவர்கள் இரண்டு பேரும் எங்களுக்காக மிகவும் பரிந்து வாதாடினார்கள். அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் சிறந்த நுண்ணிய அறிவோடு இதைக் கொண்டு வருவதானால், 1972-க்குப் பிறகு கொண்டுவாருங்கள் என்று சொல்லாமல், சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் நன்றி. அரசியல் நாகரீகத்தோடு அல்லாமல் உண்மையிலேயே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த காலத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் அமைச்சர்களுக்கெல்லாம் அறிவுரைகளை வழங்கினார்கள். நாட்டில் வறுமை தாண்டவ

மாடுகிறது. ஏழ்மை மிகுந்திருக்கிறது. சாதாரண மக்கள் உணவில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கஷ்டத்தைக் காண்கிறோம். அந்த நிலைமைகளையெல்லாம் சொல்லித்தான் ஆட்சிக்கு வந்தோம். அந்த நிலைமையை நாம் உணர வேண்டும். அந்த நிலைமையில் நம்மை வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு எடுத்துக்காட்டாக வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுரை சொன்னார்கள். அந்தக் காரணத்தினால் தான் சம்பளம் 500 ரூபாய்க்குக் குறைக்கப்பட்டது. இது போதுமா, போதாதா என்ற விவாதத்திலெல்லாம் நான் இறங்க விரும்பவில்லை. நிச்சயம் மக்களுக்குத் தொண்டாற்ற விரும்புகிறவர்கள் சிக்கனமான முறையில், எளிய முறையில் வாழ வேண்டுமென்று உலக உத்தமர் காந்தியடிகள் கற்றுத் தந்த காலத்திலேயே அவர்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காண்பித்தார்கள். அந்த முறையில் வாழ வேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோம். அதற்காக தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டாமென்று சொல்வதற்கும் தயாராயில்லை. நிச்சயம் நன்றாக ஜனநாயகம் வளர்வதற்கு நாம் பயன்படுவோம் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. அரசாங்கத்தைப் பொறுத்த அளவிற்கு, மாண்புமிகு அங்கத்தினர் குறிப்பிட்டது போல, அங்கத்தினர்கள் சட்ட மன்ற காலத்திலே அதிகமான தகவல்களைத் தெரிந்துகொண்டு இங்கே பேசுவதற்கெல்லாம் வாய்ப்புகள் கொடுக்க வேண்டும் என்று நாங்களே எதிர்க் கட்சியிலே இருந்தபோது வாதாடியது என் நினைவிற்கு வருகிறது. இதே கோரிக்கையை எதிர்க் கட்சியிலே
5-40 p.m. இருந்தபோது விடுத்தோம். அவர்கள் ஏற்றுக்கொண்டார்களா, என்ன பதில் சொன்னார்கள் என்பது விவாதத்திற்குரிய பிரச்னை. அதிலே நுழைய விரும்பவில்லை. தேவைகள் வேண்டுமென்பதை எதிர்க் கட்சியில் இருந்த காலத்தில் ஒப்புக் கொண்டோம். ஆளும் கட்சியாக இருக்கிற இந்தக் காலத்திலும் ஒப்புக்கொள்கிறோம். குறிப்பாக, திரு. தாமோதரன் அவர்கள் கூறிய கருத்து சட்டமன்றக் கூட்டம் நடக்கிற காலங்களில், சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்துத் தருவது, சட்டமன்ற நடவடிக்கைகள், குறிப்புக்களைப்பற்றித் தகவல்கள் அறிந்து கொடுப்பது, புத்தகங்கள் தேவையென்றால் தேடிக் கொடுப்பது, இது போன்ற செயல்களையெல்லாம் நாம் விரிவுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பது. அரசாங்கத்திற்கு அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. நம் நாட்டில் துர்பாக்கியமான பாரம்பரியம் சுதந்திரத்திற்கு முன்னாலேயும் பின்னாலேயும் வளர்க்கப்பட்டுவிட்டது. ஆடம்பரச் செலவு என்று மற்றவர்களைப் பார்த்துக் குறை சொல்லுவதிலே எல்லோரும் பழக்கப்பட்டு விட்டோம். அமைச்சர்கள் எவ்வளவு படிகள் வாங்கினார்கள் என்று ஆங்காங்கே மாண்புமிகு அங்கத்தினர்கள் பேசும்போது எனக்கே கூட சந்தேகம். எனக்கு எவ்வளவு செலவாகிறது என்று கணக்கெடுத்துப் பார்த்தேன். அமைச்சர்களுக்குச் சொந்த முறையில் எந்தச் செலவும் செய்யப்படுவதில்லை. அமைச்சர்களுக்குக் கொடுக்கிற சம்பளத்தைத் தவிர, மற்றச் செலவுகள் எல்லாம் அவர்களுடைய பரிவாரங்கள், அரசு அலுவலர்கள் இவர்கள் நடைமுறைச் செலவுகள். இப்படிப்பட்ட செலவுகளைத் தவிர, அமைச்சர்களுக்குச் சொந்தச் செலவுக்காகப் பணம் கொடுப்பதாகக் குறிப்பே கண்டுபிடிக்க முடியவில்லை. இதையெல்லாம் அரசியல் ரீதியாகப் பேசுவதனால் மக்களிடத்தில் தவறான எண்ணம் ஏற்படுகிறது.

8th September 1970] [திரு. எஸ். மாதவன்]

ஆனால் நிச்சயமாக மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம் தமிழ் நாடு சிறந்த சிக்கனத்தைப் பின்பற்றி வருகிறது என்பதை மறந்துவிட முடியாது. அருமையான கட்டிடங்களைப் பார்க்கும்போது அந்த எண்ணம் வருகின்றது. ஆனால் நம் நாட்டிலே சிறந்த கட்டிடங்கள் எழுப்பப்படாவிட்டாலும், சிறந்த முறையில் பயன்படுத்துவதில் விழிப்போடு இருக்கிறோம். இந்த அளவிற்கு மற்ற மாநிலங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த அளவிற்கு இந்த அவைக்கு மதிப்பு இருக்கிறது. நம் அரசாங்கம் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்று உறுதி செய்து இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 28 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

DEPUTY CHAIRMAN : There are no recommendations to clauses 2 to 11, clause 1, the long title, and the Enacting Formula. So, the Bill will be returned to the Assembly without any recommendations.

(2) *The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1970 (L.A. Bill No. 24 of 1970)*

THE HON. THIRU K.A MATHIALAGAN : Mr. Deputy Chairman, I move—

"That the Tamil Nadu Appropriation (No. 4) * Bill, 1970 (L.A. Bill No. 24 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1970 (L.A. Bill No. 24 of 1970), as passed by the Assesmbly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

DEPUTY CHAIRMAN : There are no recommendations to clauses 2 and 3, the Schedule, clause 1, the Long Title, and the Enacting Formula. So, the Bill will be returned to the Assembly without any recommendations.

---

*Printed as Appendix IV.